மின்னிதழ் E-paper
ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
21.06.2020 ஞாயிற்றுக்கிழமை

யாழ். நகரில் ஹெரோயின் விற்ற
## பொம்மைவெளி டானியல் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 21
உயிர்க் கொல்லி போதைப்பொருளான ஹெரோயினை யாழ்ப்பாணம் மாநகரில் இளைஞர்களுக்கு விநியோகித்து வந்த "பொம்மைவெளி டானியல்" யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
யாழ்ப்பாணம் பொம்மைவெளியில் வைத்து 520 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளிடன் சந்தேக நபர் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை கைது

02

## இந்தியாவிலிருந்து கஞ்சாப்பொதி இலங்கையிலிருந்து தங்கக்கட்டி!

நடுக்கடலில் நடக்கும் பரிமாற்றம்



சென்னை, ஜூன் 21
தமிழகத்தில் கடந்த 3 நாட்களில் சுமார் இலங்கை ரூபாவில் 6 கோடி மதிப்பிலான கஞ்சா கைப்பற்றப்பட்

02

# இராணுவத்தின் சூட்டில் இளைஞர் பரிதாபச் சாவு!

## முகமாலையில் நேற்றுப் பயங்கரம்






யாழ்ப்பாணம், ஜூன் 21
இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 24 வயதுள்ள இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

02

## வழிபாடுகளுடன் கோட்டாபயவின் பிறந்த நாள்

கொழும்பு, ஜூன் 21
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமய வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கித் தனது 71 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

02

## மிருசுவிலில் கோர விபத்து இரண்டு இளைஞர்கள் சாவு!

நேற்று மாலை துயரச் சம்பவம்



யாழ்ப்பானம், ஜூன் 21
மிருசுவில் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர். மற்றொருவர் படுகாயமடைந்தார்.
யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனமும்

02

## கருணாவை உடனேயே கைது செய்!

கோருகின்றது சிங்கள ராவய

கொழும்பு, ஜூன் 21
"கருணா அம்மான் இனப்படுகொலையை செய்துள்ளார். உடனடியாக அவரைக் கைது செய்ய வேண்டும்."
-இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

02

## முகமாலையில் வீதி மறியல்



யாழ்ப்பாணம், ஜூன் 21
கிளாலி துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் கொல்லப்பட்டதைக் கண்டித்து மக்கள் நேற்றிரவு வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
முகமாலையில் ஏ-9 வீதியை மக்கள் முற்றுகையிட்டு,

02

## புலிகள் பற்றிய பல இரகசியங்களை ராணுவத்துக்கு வழங்கினார் கருணா!




கொழும்பு, ஜூன் 21
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பாக கருணா பல்வேறு இரகசியத் தகவல்களை அரசுக்கு வழங்கினார் என அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

02

## கருணாவின் கருத்து மிகப்பாரதூரமானது ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு தேவை

நவீன் திஸாநாயக்க வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 21
"ஆனையிறவில் 24 மணிநேரத்துக்குள் 2 ஆயிரம் படையினரைக் கொன்றேன் என்று கருணா அம்மான் வெளியிட்டுள்ள கருத்து பாரதூரமானது. இது தொடர்பில் விசாரணை நடத்தி உண்மைகளை கண்டறிவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்படவேண்டும் என ஐக்கிய

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 1,950 | 00 | 467 | 39 | 1,472 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

## கருணாவை...

விடம் கோரியுள்ளார் சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதத்த தேரர்.

ஈழத்தை கருணா அம்மான் கோரினால் புலிகளுக்கு ஏற்பட்ட அதே நிலையே அவருக்கும் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பிரதியமைச்சரான கருணாவை உடன் கைது செய்யக்கோரி கடிதம் ஒன்றைச் சிங்கள ராவய அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது.

2000 தொடக்கம் 3000 வரையிலான ஸ்ரீலங்கா படையினரை வன்னிப் போரின்போது ஆனையிறவுப் பகுதியில் வைத்து ஒரே இரவில் படுகொலை செய்தார் என கருணா அம்மான் நேற்று நாவிதன்வெளிப் பகுதியில் நடைபெற்ற மக்கள் கூட்டத்தின்போது பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இந்த கருத்து தற்போது தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதத்த தேரர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள விநாயகமூர்த்தி என்று சொல்லப்படும் கருணா மிகவும் உடலை உலுக்கும் வகையிலான பாரதூரமான கருத்தொன்றை வெளியிட்டுள்ளார். ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்தினர் 2000 அல்லது 3000 பேரைத் தாம் கொலை செய்தார் எனக் கூறியுள்ளார். இது இலங்கைச் சட்டத்தின்படி முரணான அறிவிப்பாகும். கொலைக் குற்றச்சாட்டில் அவரைக் கைது செய்ய முடியும். அவரைக் குற்றவாளியாக்க முடியும். சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்க முடியும். உடனடியாக அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் பதில் பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியோருக்கு நினைவுபடுத்துகின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களை இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்கள் நடத்தியிருந்தன. அதனை விடவும் மனித குலத்திற்கெதிரான பாரதூரக் கொலைகளைக் கருணா அம்மான் செய்திருப்பது அவராலே சொல்லப்பட்டுள்ளது. ஆனையிறவுப் பகுதியில் மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தில் அரந்தலாவ பகுதியில் பிக்குமார்களைப் படுகொலை செய்தமை, சில கிராமங்களுக்குள் நுழைந்து அப்பாவி மக்களை வெட்டிக் கொலை செய்தமை போன்ற செயற்பாடுகளை கருணா செய்திருக்கின்றார்.

## இராணுவத்தின்...

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.20 மணியளவில் கிளாலிப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றுக்கு அருகில் இடம்பெற்றது.

சம்பவத்தில் பளை, கெற்பலியைச் சேர்ந்த திரவியம் இராமலிங்கம் (வயது -24) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

முகமாலை-கிளாலி வீதியில் இருக்கும் இராணுவ முகாமின் அருகே டிராக்டரில் மணல் கொள்ளை இடம்பெறுவதாக இராணுவத்தினருக்குத் தகவல் கிடைத்தது என்றும்-

அந்தத் தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு படையினர் சென்றபோது டிராக்டர்களில் மணல் ஏற்றியவர்கள் தப்பியோடியபோது இராதாகிருஷ்ணனை இராணுவத்தினர் இடைமறித்தனர் என்றும், ஆயினும் அவர் இராணுவத்தை மதிக்காமல் தப்பிச் செல்ல முற்பட்டபோதே சிப்பாய் ஒருவர் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார் என்றும் பொலிஸார் கூறினர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய இராணுவச் சிப்பாய் பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்தவரைப் பளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றவேளை வைத்தியசாலையில் வைத்தியர் எவருமே இல்லை என்றும்-

தாதியர்களே இருந்தனர் எனவும்- இதனால் எந்தவொரு சிகிச்சையும் அளிக்கப்படவில்லை என்றும் உயிரிழந்தவரின் உறவுகள் தெரிவித்தனர்.

அந்த நேரத்தில் ஒரேயொரு வைத்தியரே நிரந்தரமாக பணியில் உள்ள நிலையில் அவர் பணி முடிந்து வீடு திரும்பியிருந்தார். ஓர் ஒப்பந்த வைத்தியரும் அங்கு பணியாற்றுகின்றார். சூட்டுக் காயத்துடன் இளைஞர் அனுமதிக்கப்பட்ட சமயம் அவரும் விடுமுறையில் இருந்தார் என்று வைத்தியசாலைத் தரப்பினர் கூறினர்.

சூட்டுச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் மணல் ஏற்றும் நடவடிக்கையில் மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட மேலும் நால்வர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று இரவு 10 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்ற நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூறுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

## இந்தியாவிலிருந்து...

டுள்ளது. கடத்தல்காரர்களைக் கைதுசெய்ய முடியாமல், போதை தடுப்புப் பொலிஸார் திணறி வருகின்றனர்.

இலங்கைக்க கடத்தப்படவிருந்த கஞ்சாப் பொதிகளே கைப்பற்றப்பட்டுள்ளன.

நாகை மாவட்டம் வேதாரண்யம் வட்டத்தில் மணியன் தீவு, ஆறுகாட்டுத்துறை, புஷ்பவனம், வேட்டைக்காரனிருப்பு ஆகிய கடற்கரைப் பகுதிகளிலிருந்து இலங்கைக்கு அடிக்கடி கஞ்சா கடத்தப்படுகிறது. இலங்கையில் கஞ்சாவைக் கொடுத்துவிட்டு, அங்கிருந்து தங்கக் கட்டிகள் கடத்தி வரப்படுவது தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில், கோடியக்கரை அருகே பச்சைக்காட்டுப் பகுதியில் சாக்கு மூடைகள் இருப்பதாக வேதாரண்யம் கடலோரக் காவல் படைக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் கடலோரக் காவல்படை டி.எஸ்.பி. குமார் தலைமையில், கோடியக்கரையிலிருந்து படகு மூலம் பச்சைக்காடு சென்றனர்.

அங்கிருந்த சாக்கு மூடைகளைப் பிரித்துப் பார்த்தபோது, 82 கிலோ கொண்ட 41 கஞ்சா கட்டுக்கள் இருந்துள்ளன. கோடியக்கரையிலிருந்து கஞ்சாவை இலங்கைக்கு கடத்திச் சென்றபோது தவறி விழுந்ததா அல்லது இலங்கைக்குக் கடத்து வதற்காக கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததா என்று பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகிறார்கள்.

தரங்கம்பாடி அருகே உள்ள சின்னங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் ஜெயகாந்த். இவரது பைபர் படகில் மீனவர்கள் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, வலையில் ஒரு மூடை சிக்கியுள்ளது. அதை மீனவர்கள் எடுத்துப் பார்த்தபோது, அந்த மூட்டைக்குள் 16 பொட்டலங்களில் 32 கிலோ எடையுள்ள கஞ்சா இருந்துள்ளது. அதைக் கிராம பஞ்சாயத்தார் மூலம் கடலோரக் காவல்படையிடம் ஒப்படைத்துள்ளனர். இந்த இரண்டு சம்பவத்திலும் பிடிபட்ட கஞ்சாவின் மதிப்பு, இலங்கை ரூபாவில் சுமார் 6 கோடி என்றும் கொரோனாவுக்குப் பின் கஞ்சா விலை மும்மடங்கு அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுபற்றி நாகை மாவட்ட போதை தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் சாந்தகுமாரி கூறுகையில்-

கடத்தல் கஞ்சா பிடிபட்டுள்ளது. கடத்தல்காரர்கள் பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன. தீவிர விசாரணை நடந்துவருகிறது. விரைவில் குற்றவாளிகளைக் கைதுசெய்வோம்- என்றார்.

## புலிகள் பற்றிய...

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகி இராணுவத்துக்கும், அரசுக்கும் ஒத்துழைப்பு வழங்கினார். இதன் பின்னரே இவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. கருணா வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இறுதிக்கட்ட யுத்தம் குறுகிய காலத்தில் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது.

எனவே தற்போது இவர் தெரிவித்துள்ள கருத்து இராணுவத்தில் உயிர்நீத்தவர்களின் உறவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். இறுதிக்கட்ட யுத்தத்தை மிக விரைவில் நிறைவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற தேவை காணப்பட்டதால் இவரது உதவியை அப்போது பெற்றுக் கொண்டோம்-என்றார்.

## கருணாவின்...

தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று மாலை ஐக்கிய தேசியக் கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரானவன் அல்லன். 750 ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையொன்றை பெற்றுக்கொடுப்பதற்கே முயற்சித்தேன். கொடுப்பனவுகள்மூலம் ஆயிரம் ரூபாவைப் பெறுவதற்கான சூழ்நிலை அன்று இருந்தது. ஆனால், அந்தத் தொகையை அடைவதற்கான வழிமுறையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிராகரித்தது.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக நான் அதிகாரபூர்வமாகப் பதவியேற்ற பின்னர், அடுத்த கூட்டு ஒப்பந்தத்தில் ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

திகாம்பரம் தரப்பினர் கூட்டு ஒப்பந்தப் பேச்சில் இல்லை. எனவே, வெளியில் இருந்துகொண்டு அவர்கள் எப்படியான கருத்துகளையும் வெளியிடமுடியும். வெளியில் இருந்து இவ்வாறு சேறு பூசலாம். ஆனால், உள்ளே இருந்து தக்க வைத்துக்கொள்வதுதான் கடினம்.

2016 ஆம் ஆண்டு தீபாவளிக் கொடுப்பனவை வழங்குமாறு கோரினார் (திகாம்பரம்). நான் 35 கோடி ரூபாவை வழங்கினேன். இன்று அதனை மறந்துவிட்டனர்.

50 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்காக தேயிலை சபை ஊடாக 60 கோடி ரூபாவை ஒதுக்க நடவடிக்கை எடுத்தேன். அதற்குள் சூழ்ச்சி செய்து மைத்திரிபால சிறிசேன ஆட்சியைக் கவிழ்த்துவிட்டார்.

கருணா என்ற புலி உறுப்பினர் வெளியிட்டுள்ள கருத்து பாரதூரமானது. 1977 முதல் ஆனையிறவை ஐக்கிய தேசியக்கட்சி அரசு பாதுகாத்தது. 2000 ஆம் ஆண்டு சந்திரிகா ஆட்சியின்போதே ஆனையிறவு வீழ்ந்தது. இவ்வாறு ஆனையிறவு வீழ்ந்தபோது ஒரே நாளில் 2 ஆயிரம் படையினரை கொன்றார் எனக் கருணா அம்மான் அறிவித்துள்ளார்.

## வழிபாடுகளுடன்...

அதற்கமைய நேற்றுக் காலை ருவான் வெலிசாயவுக்கு பயணம் செய்த ஜனாதிபதி அங்கு விளக்கேற்றி வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதன் பின்னர் உடுவே தம்மாலோக தேரர் தலைமையில் இடம்பெற்ற சமய வழிபாடுகளிலும் அவர் பங்கேற்றார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சமய வழிபாடுகளில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் சமல் ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## முகமாலையில்...

போக்குவரத்தைத் தடை செய்தனர்.

நேற்று மாலை கிளாலிப் பகுதியில் மணல் ஏற்ற சென்றவர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டார்.

அவரது சடலம் பளை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த கொலையினால் ஆத்திரமடைந்த பிரதேச மக்கள் ஒன்று திரண்டு முகமாலையில் ஏ-9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதியை குறுக்கறுத்து பொதுமக்கள் உட்கார்ந்தனர்.

இதனால் அந்த பகுதியில் பதற்றம் நிலவியது.

பின்னர் அங்கு வந்த பொலிஸ் அதிகாரி வழங்கிய உறுதிமொழியை அடுத்து மக்கள் போராட்டத்தைத் தற்காலிகமாக கைவிட்டனர்.

## மிருசுவிலில்...

மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயங்களுடன் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து அங்கு உயிரிழந்தார்.

சோரன்பற்று, இயக்கச்சியைச் சேர்ந்த 18 வயதான கண்ணதாசன் கஜீபன் என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

சம்பவ இடத்தில் உயிரிழந்த தங்கராசா சுவேந்திரனின்(வயது-18) சடலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

## பொம்மை வெளி...

செய்யப்பட்டார்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டார்.

"யாழ்ப்பாணம் மாநகரில் இளைஞர்களுக்கு ஹெரோயின் போதைப்பொருளை விநியோகித்து வந்த 'பொம்மைவெளி டானியல்' நீண்ட நாள்களாக தேடப்பட்டு வந்தார். பொலிஸாருக்கு டிமிக்கிவிட்டு வந்த சந்தேக நபர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் விற்பனையைத் தடுக்க சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கவேண்டும்" என்று பொலிஸாருக்கு சமர்ப்பணம் செய்தனர்.

"எனது பெயரும் டானியல்தான். ஆனால் பொலிஸாரால் தேடப்படும் போதைப்பொருள் வியாபாரி பொம்மை வெளி டானியல் நான் இல்லை" என்று சந்தேக நபர் தெரிவித்தார்.

வழக்கை ஆராய்ந்த நீதிவான் சந்தேக நபரை வரும் ஜூலை 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஈழநாடு
Eelanadu
21.06.2020 ஞாயிற்றுக்கிழமை

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு?

இனிவரப்போகும் சில வாரங்களுக்கு, அனைவரது வாய்களும் மீண்டும் அரசியல் தீர்வு தொடர்பிலேயே உச்சரிக்கும். ஒவ்வொருவரும் மற்றவர்களை குற்றம்சாட்டுவர். ஆனால் அரசியல் தீர்வு தொடர்பில் பேசுபவர்கள் அனைவரும் உண்மையிலேயே விடயங்களை அறிந்துதான் பேசுகின்றனரா? 2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து, அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு அபரிமிதமான நம்பிக்கை நிலவியது. புதிய அரசியல் யாப்பு தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழு - அரசியல் யாப்பிற்கான உப குழுக்கள் - இடைக்கால அறிக்கை - புதிய அரசியல் யாப்பிற்கான வரைபு - என பல விடயங்கள் மிகவும் அமர்க்களமாக இடம் பெற்றன. இதில் நம்பிக்கையில்லாதவர்கள் கூட, ஏதோ வந்துவிடுமோ என்று எண்ணுமளவிற்கு காரியங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. ஆனால் இறுதியில் அனைத்துமே புஸ்வானமாகியது. ஒரு விறுவிறுப்பான படத்தின் முடிவு எந்தவொரு சுவார்சியமும் இல்லாமல் முடிவுற்றது.

ஒவ்வொரு தேர்தல்களின் போதும், தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் அரசியல் தீர்வை பெற்றுத் தருவதாக கூறியே மக்களிடம் வாக்குகளை கோருகின்றன. ஆனால் அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் எவ்வித முன்னேற்றங்களையும் காண முடியவில்லை. 2009இற்கு பின்னரான, கடந்த பத்து வருடகாலத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற அரசியலால், தீர்வு நோக்கி பயணத்தில் எந்தவொரு முன்னேற்றத்தையும் அடைய முடியவில்லை. கூட்டமைப்பு தவறான வழியில் சென்றுகொண்டிருப்பதாக கூறியவர்களாலும், மக்களை அணி திரட்டி, அரசியல் தீர்விற்கான எந்தவொரு போராட்டத்தையும் நடத்த முடியவில்லை. அவர்களும் கதிரைகளுக்கான போட்டியில்தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.


2015இல், சிறிலங்கா அரசாங்கம் இணையனுசரனை வழங்கி ஏற்றுக்கொண்ட ஜெனிவா பிரேரணை ஒன்றுதான், தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேசுகின்ற ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ஆவணம். அதாவது, இலங்கை பொறுப்புச் சொல்ல வேண்டிய ஆவணம். சர்வதேச அரங்குகளில் பல்வேறு ஆவணங்கள் இருக்கலாம் ஆனால் அவற்றுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கில்லை. அந்த ஒரேயொரு ஆவணத்தில் கூட, 13வது திருத்தச் சட்டம் தொடர்பில் மட்டுமே பேசப்பட்டிருக்கின்றது. இந்த ஆவணத்தை வைத்துக் கொண்டுதான் நமது அரசியல் கட்சிகள் அனைத்தும் மல்லுக்கட்டின. இந்த ஆவணத்தில் உள்ளவற்றை அமுல்படுத்துமாறுதான் இப்போது அனைத்து தரப்பினரும் கேட்கின்றனர். ஒரு வேளை இந்த ஆவணத்தில் இருப்பவற்றை நாம் பரிசீலிக்கின்றோமென்று, புதிய அரசாங்கம் கூறுமாக இருந்தால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வென்பது எதுவாக இருக்கும்? இதற்கான பதிலை மக்கள்தான் தேடவேண்டும்.

பிறிதொரு தரப்பினர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வேறு கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். அதாவது, தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் இனப்படுகொலை, இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் என்பவற்றுக்கு நீதியை பெறுவதன் ஊடாகத்தான் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெறமுடியுமென்பது, அவர்களின் வாதமாக இருக்கின்றது. இவ்வாறானவர்கள், கடந்த பத்து வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் முற்றத்தில் முகாமிட்டிருந்தனர். ஆனாலும் எதிர்பார்த்த விடயங்களில் மிகக் குறைந்த தூரம்கூட முன்னேற முடியவில்லை. தென்னிலங்கையிலுள்ள எந்தவொரு சிங்கள கட்சியும் இறுதி யுத்தம் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் அரசியல் தலைமைகள் எதிர்பார்த்த சர்வதேச சமூகமும் இந்த விடயத்தில் பெரிதாக கைகொடுக்கவில்லை. இந்த நிலைமையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் எதிர்காலம் என்ன? தமிழ் மக்கள் தங்களை தாங்களே தீர்மானித்து வாழக் கூடியதொரு அரசியல் தீர்வை காண்பதற்கு இந்தத் தலைமைகளால் முடியுமா? இவர்கள் தேர்தல் காலத்தில் பேசுகின்ற அரசியல் தீர்வின் பொருள் என்ன? எந்தவொரு முயற்சியும் இல்லாமல், சிறிலங்காவின் நாடாளுமன்றத்திற்கு செல்வதன் மூலமாக மட்டும், அரசியல் தீர்வை பெற முடியுமென்றால், அதனை எப்போதோ பெற்றிருக்கலாமே! இது தொடர்பில் சிந்திக்க வேண்டியவர்கள் மக்கள் மட்டுமே!

# நயினாதீவு அம்மன் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலய உயர் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமாகியது.



15 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் உயர் திருவிழா தெப்பத் திருவிழாவுடன் நிறைவுறும்.

ஆண்டு தோறும் பல லட்சம் அடியார்கள் இலங்கையின் பலபகுதிகளில் இருந்துமட்டுமில்லாமல் வெளிநாடுகளில் இருந்தும் வருகை தருவார்கள். எனினும் இம்முறை கொவிட்-19 நோய்க் கட்டுப்பாடுகளையடுத்து நயினாதீவு மக்களில் 100 பேர் மட்டுமே ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய கொடியேற்றத்தில் ஆலயச் சிவச்சாரியர்கள், நிர்வாகத்தினர் உள்ளிட்டோர் மட்டுமே ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர்.



# நல்லூரில் இளைஞரைத் தாக்க முயற்சித்தனரென 7 பேர் கைது



நல்லூரில் இளைஞர் ஒருவரை தாக்குவதற்குச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் 7 இளைஞர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நல்லூரில் இளைஞர் ஒருவரைத் தாக்குவதற்காக அவரது வீடு தேடி இளைஞர்கள் 7 பேர் கொண்ட குழு, மோட்டார் சைக்கிள்களில் நேற்று பிற்பகல் சென்றது.

இதனை அறிந்த இளைஞனின் மூத்த சகோதரன், அந்த இளைஞர்கள் குழுவை விரட்டிச் சென்றபோது, குழுவில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிலை குலைந்து வீதியில் விபத்துக்குள்ளாகியது. அதனால் இரண்டு பேர் சிக்கினர்.

இளைஞர்கள் இருவரையும் தாக்கிய பின் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இராணுவத்தினர் அவர்கள் இருவரையும் சிறப்பு அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

இளைஞர்கள் இருவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் தப்பி ஓடிய மேலும் 5 பேர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நல்லூர், அரியாலை மற்றும் ஓட்டுமடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 7 இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

# கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டிய இரண்டு பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

நாவாந்துறைப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமான முறையில் கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டிய 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 520 கிலோ கிராம் மாட்டிறைச்சி கண்டெடுக்கப்பட்டதோடு இறைச்சிக்காக வெட்டுவதற்கு தயாராகக் கட்டி வைத்திருந்த மூன்று மாடுகளும் இரண்டு ஆடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் சட்டவிரோதமாக கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாக அப்பகுதி பொது மக்களால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இத்தகவலின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை காலை அங்கு மாநகர சபை ஊழியர்களுடன் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் அப்பகுதி பொதுமக்களுடன் இணைந்து இறைச்சி வெட்டப்படும் இடத்தை முற்றுகையிட்டிருந்தனர்.



# நாட்டில் இதுவரை 95 ஆயிரம் பி.சி.ஆர்.

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகள் எண்ணிக்கை 95 ஆயிரத்தை நெருங்கியுள்ளது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் மாத்திரம் தொற்றுநோயியல் பணியகத்தினால் 1,495 பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதிமுதல் இதுவரை 94 ஆயிரத்து 260 பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான 1950 பேரில் கடற்படையினர் 771 பேர் இதுவரை பூரண குணமடைந்துள்ளனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுரு சூரியபண்டார, கொரோனா தொற்று உறுதியானவர்களில் மேலும் 127 கடற்படையினர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

செய்திகள்

# குற்றவாளிகளின் பயிற்சி மையங்களாகச் சிறைகள்!

## சீறி விழுந்தார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஜூன் 21

குற்றங்களைச் செய்வதற்குப் பயிற்சியளிக்கும் இடங்களாகத் தற்போது சிறைச்சாலைகள் காணப்படுகின்றன. இதனால் குற்றவாளிகளின் விளையாட்டு மைதானமாகச் சிறைச்சாலைகள் உள்ளன என்று கடும் விசனம் தெரிவித்த சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா, சிறைச்சாலைகள் தொடர்பில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதால் நேர்மையான செயற்திறன் மிக்க அதிகாரிகளைத் தாம் எதிர்பார்க்கிறார் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டபோது சிறைச்சாலை அதிகாரிகள் முன்னிலையில் உரையாற்றும்போதே சட்டமா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தமைக்குச் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். சிறைச்சாலைக்கு உத்தியோகபூர்வமாக வருகை தந்த முதலாவது சட்டமா அதிபர் நான் என்பதில் பெருமையடைகின்றேன். சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மிக முக்கியமான விடயத்தை வலியுறுத்துவதற்காகவே நான் இங்கு வந்தேன்.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகமாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள துஷார உப்புல் தெனிய பாரிய பொறுப்புக்கள் உள்ளன. அந்தப் பொறுப்புக்களை இலகுவாக நிறைவேற்றிவிட முடியாது. அவற்றை நிறைவேற்றுவதற்கு அனைத்துச் சிறைச்சாலை அதிகாரிகளினதும் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் அத்தியாவசியமானதாகும்.

நாம் தற்போது நேர்மையான செயற்திறன் மிக்க அதிகாரிகளையே எதிர்பார்க்கின்றோம். நேர்மையாக சட்ட ரீதியாகச் செயற்படுகின்ற அதிகாரிகள் நிச்சயம் தெரிவு செய்யப்பட வேண்டும்.

சிறைச்சாலைகள் தொடர்பில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. நாம் நேரடியாகப் பேசுவோம். இங்கு எவ்வாறான நிலைமை காணப்படுகிறது என்பதை நீங்கள் ; அனைவரும் நன்கு அறிவீர்கள். உங்களது உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னரே இங்கு வருகை தந்துள்ளேன். அத்தோடு அங்கிருந்து எனக்கு கிடைக்கப் பெறும் தகவல்களும் உள்ளன.

இங்கு சில ஊழலில் ஈடுபடும் அதிகாரிகள் உள்ளனர். அந்த அதிகாரிகள் யார் என்று இனங்காண வேண்டும். தற்போது காணப்படும் நிலவரத்துக்கு அமைய சிறைச்சாலைகள் குற்றவாளிகளின் விளையாட்டு மைதானமாக மாறியுள்ளது. குற்றச் செயல்களைச் செய்வதற்காக பயிற்சியளிக்கும் ஸ்தலமாகவே சிறைச்சாலைகள் காணப்படுகின்றன. இங்கு ஒழுக்கமின்மையே இதற்கான காரணமாகும்.

சிறைச்சாலைகளுக்குள்ளேயே குற்றங்கள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. பாதாள உலகக் குழுவினர் இதற்குள் உள்ளனர். அதனை நீங்கள் அறிவீர்கள். சிறைக்குள் ஒரு தொகுதியினரும் வெளியில் ஒரு தொகுதியினரும் உள்ளனர். இந்த இரு பிரிவினரும் இணைந்து நாட்டில் பல்வேறு குற்றச் செயல்களை முன்னெடுக்கின்றனர். கையடக்தொலைபேசி பாவனை மூலமே இவர்கள் செயற்படுகின்றனர்.

அவை நிறுத்தப்பட வேண்டும். ஆனால் இங்கு அதிகாரிகள் சேவையாளர்களாகியுள்ளனர். இவற்றை நிறுத்த முடியும் என்று உங்களை ஊக்கப்படுத்தவே நான் இங்கு வருகை தந்தேன். முதலில் நாம் யதார்த்தத்தை இணங்காண வேண்டும்-என்றார்.

# ஞானசார தேரருக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஜூன் 21

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பாதுகாப்பு வழங்குமாறு, ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாக்கும் அதிகார சபைக்கு உத்தரவிட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஞானசார தேரர் வழங்கிய சாட்சியம் காரணமாக அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என ஆணைக்குழுவின் தலைவரும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசருமான ஜனக்க டி சில்வா, இந்த உத்தரவை பிறப்பித்து தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஞானசார தேரர் நேற்று முன் தினம் மூன்றாவது முறையாகவும் சாட்சியமளித்துள்ளார்.

# அரசுக்கு ஆதரவு குறித்து முடிவெடுக்கவில்லை!

## கூறுகின்றார் சம்பந்தன்



கொழும்பு, ஜூன் 21

"நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஷ அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அந்த அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை முடிவு எதனையும் எடுக்கவில்லை."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

தமிழ் மக்களுக்கு விரோதமாக ராஜபக்ச அரசு செயற்பட்டதால் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. அதே வருடத்தில் புதிதாக ஆட்சிக்கு வந்த அரசுக்கு வெளியில் இருந்து நாம் ஆதரவு வழங்கினோம். எங்களுடைய உதவியும் அந்த அரசுக்குத் தேவைப்பட்டது.

அந்த ஆட்சியில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள். புதிய அரசமைப்புக்கான பணிகள் உட் பட பல நல்ல கருமங்கள் முன்னெடுக்கப்பட்டன. துரதிஷ்டவசமாக அந்த ஆட்சி தொடர முடியாத நிலைமை ஏற்பட்டது. அது வேதனைக்குரிய விடயம்.

இந்தநிலையில், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ச அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அந்த அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை முடிவு எதனையும் எடுக்கவில்லை .

எனினும், நாம் நிதானமாகச் சிந்தித்து எமது மக்களின் எதிர்கால நன்மை கருதிச் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்று எல்லோருடைய ஆலோசனைகளையும் பெற்று எந்த ஆட்சி மூலம் இந்த நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும் என்று நல்ல முடிவு எடுத்து அந்த முடிவின் அடிப்படையில் நாம் செயற்படுவோம்- என்றார்.

# தங்கள் இயலாமையை மறைக்க சங்கா, மஹேல மீது குற்றச்சாட்டு!

## மஹிந்தானந்த மீது பாய்கிறார் சஜித்



கொழும்பு, ஜூன் 21

தமது அரசின் இயலாமையை மறைப்பதற்காக நாட்டின் கிரிக்கெட் வீரர்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது சில செயற்திறனற்ற அரசியல்வாதிகளால் ஒரு நுட்பமாகப் பயன்படுத்தப்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

2011 உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் ஆட்டநிர்ணயம் செய்யப்பட்டது என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வெளியிட்ட கருத்தையடுத்து பெரும் சர்ச்சையொன்று கிளம்பியிருக்கும் நிலையில், எவ்வித ஆதாரங்களுமின்றி அவர் முன்வைத்த குற்றச்சாட்டுக்குக் கண்டனங்களும் வலுத்து வருகின்றன.

இந்தநிலையில், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்குக் கண்டனம் வெளியிட்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது டுவிட்டர் பக்கத்தில்,

தமது அரசின் இயலாமையை மறைப்பதற்காக நாட்டின் கிரிக்கெட் வீரர்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது சில செயற்தினற்ற அரசியல்வாதிகளால் ஒரு நுட்பமாகப் பயன்படுத்தப்படுகிறது.

2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் தமது திறமையை நிரூபித்த சிறந்த கிரிக்கெட் வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோர் மீது இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படக்கூடாது.

அவர்களுடைய அர்ப்பணிப்பான சேவைக்கும், அவர்கள் நாட்டுக்குப் பெற்றுத் தந்தவற்றுக்கும் உயர்வாக நடத்தப்படும் தகுதியை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவத்தை சேர்ந்த 71 பேருக்கு பதவியுயர்வு

கொழும்பு, ஜூன் 21

இராணுவத்தைச் சேர்ந்த 71 பேருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் கேணல் பதவியில் இருந்த 41அதிகாரிகள், பிரிகேடியர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனரென இராணுவ ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, லெப்டினண்ட் கேணல் பதவியில் இருந்த 30பேர், கேணல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி முதல் இந்த பதவியுயர்வு அமுலுக்கு வரும் எனவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுச் செய்திகள்



# நாட்டுக்கு அபகீர்த்தி

சர்சையை ஏற்படுத்தியுள்ள மஹிந்தானந்த அளுத்கமகேயின் கருத்து தொடர்பில் இலங்கை அணியின் வீரரும் ஒருநாள், இருபது 20 போட்டிகளின் முன்னாள் தலைவரும் கடந்த 2011 ஆண்டு உலக கிண்ண கிரிகெட் தொடரில் விளையாடிய வீரருமான லசித் மலிங்க தனது கருத்தை முன்வைத்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள காணொளியொன்றை லசித் மலிங்க வெளியிட்டுள்ளர்.

அந்த காணொளியில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியை நாங்கள் பணத்திற்காக விட்டுகொடுத்ததாக தெரிவித்துள்ள கருத்தினால், இலங்கை கிரிக்கெட் அணிக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், 2011 ஆண்டின் உலக கிண்ண கிரிகெட் போட்டியில் விளையாடிய வீரர் என்ற வகையிலும், அந்தப் போட்டியில் பந்து வீச்சின் போது முதல் இரண்டு விக்கட்டுகளை எடுத்தவர் என்ற வகையிலும் இது குறித்து தெளிவுப்படுத்துவற்காக நான் காணொளி மூலம் உங்களிடம் வந்துள்ளேன்.

மிகவும் சாதாரணமான விடயம் ஒன்றுதான் உள்ளது, பணத்திற்காக விட்டுகொடுத்ததாக செல்கின்றார்கள். அது தொடர்பில் அனைத்து விடயங்களும் தெரியும் என்கின்றார்கள். அப்படியானால் நான் நினைக்கின்றேன், நாம் நாடு என்ற வகையில் மிகவும் அபகீர்த்திக்கு உள்ளான தருணம் இது.

இந்த விடயம் குறித்த உண்மைநிலையை அறிய அதிக காலம் ஆகும் என்று நான் நினைக்கவில்லை, ஏனென்றால் அந்த விடயத்தை புரிந்ததாக தெரிந்திருந்தாலும் செய்தவர்கள் யார் என்று தெரிந்திருந்தாலும் அதன் உண்மைத் தன்மையை தேடுவதற்கு மிகஅதிக நாட்கள் தேவைப்படாது.

அதே போன்று மக்களின் பிரதிநிதி என்ற வகையில் மக்களை தவறான பாதையில் வழிநடத்தாது, மக்களுக்கு வெளிப்படையாக இவர்கள் தான் பணத்திற்காக போட்டியை விலை பேசியவர்கள் இவர்கள் தான் அதற்காக செயற்பட்டவர்கள் என்று தெளிவுபடுத்துவதற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

அப்படி செய்யாவிட்டால் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் இப்படியான பொய்யர்களை மக்களாகவே நிராகரிப்பதற்கு, இதனால் இந்த கிரிக்கெட் அணியின் நன்மைக்காகவும் எதிர்காலத்தில் விளையாடவுள்ள வீரர்களுக்காகவும், அவர்களின் பெற்றோர்களுக்காகவும் இந்த விளையாட்டு தொடர்பில் பிழையான கண்ணோட்டத்தை இல்லாமல் செய்வதற்கு அரசு என்ற வகையில், முன்னெடுக்க கூடிய அதிகூடிய சட்ட நடவடிக்கையை முன்னெடுத்து, போட்டி தொடர்பான ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்கள் யார் என்பதை கண்டுபிடித்து அவர்களை நீதியின் முன் முற்படுத்தி இக் கிரிகெட் விளையாட்டில் உள்ள கறையை நீக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டு கொள்கின்றேன்.

இவற்றுக்கு தீர்வு வழங்கக் கூடிய சட்டதிட்டங்கள் இல்லாத பட்சத்தில் புதிய சட்டதிருத்தங்களை சட்டங்களில் ஏற்படுத்தி இவ்வாறான செயல்களுக்கு தீர்வொன்றை பெற்றுத்தருமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன் -என்று கூறியுள்ளார்.

# லங்கா பிரீமியர் லீக் ரி-20 ஒகஸ்ட்டில்!




'லங்கா பிரீமியர் லீக்' ரி-20 தொடரை மீண்டும் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக, இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

உள்ளூர் செய்தித்தாள்களில் விளம்பரதாரர்களுக்கு அழைப்பு விடுத்து நேற்று வெளியிடப்பட்ட விளம்பரத்தின் ஊடாக இந்தச் செய்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் நடைபெற்றுவரும் ஏனைய பிரீமியர் லீக் ரி-20 தொடர்களைப் போலவே இத்தொடரிலும் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த பிரபல்யமிக்க வீரர்களை இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் நடைபெறும் ரி-20 தொடரில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வீரர்களுடன் ஆறு அணிகள் இடம்பெறும்.

16 போட்டி நாட்களில் 23 போட்டிகள் விளையாடப்படும். அதே நேரத்தில் ஒரு அணி அதிகபட்சம் 6 வெளிநாட்டு வீரர்களைக் கொண்ட 16 வீரர்களைக் கொண்ட அணியைத் தேர்வு செய்ய லாம்.

லங்கா பிரீமியர் லீக் ரி-20 தொடர் (எல்.பி.எல்) எதிர்வரும் ஒகஸ்ட் 15ஆம் திகதி முதல் செப்டம்பர் 4ஆம் திகதி வரை விளையாட முன்மொழியப்பட்டுள்ளது.

# 6 ஆவது முறை மகுடம் சூடியது நபோலி அணி!

இத்தாலி கிண்ணத் தொடரின் மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், வெற்றிபெற்று நபோலி அணி ஆறாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

ரோமில் உள்ள ஒலிம்ப்கோ மைதானத்தில் இரசிகர்கள் இன்றி நடைபெற்ற இந்த பரபரப்பான போட்டியில், நபோலி அணியும் ஜூ வெண்டஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இந்தப் போட்டியில், 90 நிமிடங்கள் வரை இரு அணிகள் கடுமையாகப் போராடியும் கோல் அடிக்க முடியவில்லை.

கொரோனா பாதிப்புக்குப்பின் போட்டிகள் தொடங்கியதால் வீரர்கள் காயத்தைக் குறைக்கும் வகையில் கூடுதல் நேரம் இரத்து செய்யப்பட்டது.

இதனால், சம்பியனை தெரிவு செய்வதற்கு பொனால்டி சூட் அவுட் முறை வழங்கப்பட்டது. இதில் நபோலி 4-2 என ஜூவெண்டஸ் அணியை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இப்போட்டியில் சம்பியன் பட்டம் வெல்லும் என அதிகமானோரால் கணிக்கப்பட்ட ஜூவெண்டஸ் அணி, நட்சத்திர வீரர்களான பவுலோ டைபாலா, டேனிலோ ஆகியோர் பெனால்டி சூட் அவுட் வாய்ப்பை தவறவிட்டதன் மூலம் தோல்வியை தழுவியது.







# ரியல் மட்ரிட் மிரட்டல்

லா லிகா உதைபந்து தொடரின் வெலன்ஸியா அணிக்கெதிரான லீக் போட்டியொன்றில், ரியல் மட்ரிட் அணி சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது.

அல்ஃபிரடோ டி ஸ்டெபனோ விளையாட்டரங் கில், உள்ளூர் நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில், ஆரம்பம் முதலே ரியல் மட்ரிட் அணி ஆதிக்கம் செலுத்தியது.

இதன்படி இரு அணிகளும் முற்பாதியில் கோல் எதுவும் அடிக்காவிட்டாலும், போட்டியின் பிற்பாதி யில் அணியின் நட்சத்திர வீரரான கரீம் பென்ஸிமா அணிக்காக இரண்டு கோல்களை அடித்தார்.

போட்டியின் 61ஆவது மற்றும் 86ஆவது நிமிடங்கள் என இரண்டு கோல்களை கரீம் பென்ஸிமா புகுத்தி அணியின் வெற்றிக்கு துணை நின்றார்.

அதேபோல, அணியின் மற்றொரு வீரரான மார்கோ அசன்ஸியோ போட்டியின் 74ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

இதற்கமைய போட்டியின் இறுதியில் 3-0 என்ற கோல்கள் கணக்கில், ரியல் மட்ரிட் அணி சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

லா லிகா உதைபந்து தொடரின் புள்ளிப்பட்டியலை பொறுத்தவரை ரியல் மட்ரிட் அணி 62 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. வெலன்ஸியா அணி 43 புள்ளிகளுடன் 8ஆவது இடத்தில் உள்ளது.

செய்திகள்

# மீண்டும் காட்டாட்சிக்கு மக்கள் இடம் தரமாட்டர்!

## மங்கள அதிரடிக் கருத்து



கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் மீண்டும் காட்டாட்சிக்கு மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். அந்த வழியில் செயற்பட முயற்சிப்பவர்களை மக்களுடன் நாம் சேர்ந்து வீட்டுக்கு அனுப்பிவைப்போம் என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்த நாடு மக்களுக்குத் தான் சொந்தம். அதிகார வெறியி லும் பதவி ஆசையிலும் இருப்பவர்களுக்கு இந்த நாடு சொந்தமல்ல. நாட்டை யார் ஆட்சி செய்வது என்று மக்களே தீர்மானிப்பார்கள். யாரை வீட்டுக்கு அனுப்புவது என்றும் அவர்களே முடிவெடுப்பார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதிகார வெறித்தனத்திலும் பதவி ஆசையிலும் இருப்பவர் களுக்கு எதிராக மங்கள சமரவீரவுடன் இணைந்து அதிரடி ஆட்டம் காட்ட நான் தயாராக இருக்கின்றேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருந்தார். இது தொடர்பில் மங்களவிடம் வின வியபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

நாடாளுமன்ற அரசியலிருந்து தான் நான் விலகியிருக்கின் றேன். ஆனால், செயற்பாட்டு அரசியலில் மக்களுடனும் சந்தி ரிகா போன்ற அரசியல் விற்பன் னர்களுடன் நான் சேர்ந்து இயங்குவேன்.

சந்திரிகா பழுத்த அரசியல்வாதி. 2015இல் ஆட்சி மாற்றம் இடம்பெறுவதற்கு அவர் வெளி யிலிருந்து பெரும் பணியாற்றி னார்.

தற்போது நாடாளுமன்ற அரசியலிருந்து நாம் விலகி யிருந்தாலும் நாடாளுமன்றத் துக்கு யார் செல்ல வேண்டும் என்பதை மக்களுடன் சேர்ந்து தீர்மானிப்போம்.

மக்களின் அனுமதியுடன் தான் எவரும் ஆட்சிக்கு வரலாம். அதுபோல் மக்களின் அனுமதி யுடன்தான் அதிகாரத் தில் உள்ளவர்கள் எதையும் செய்ய லாம். அதைவிடுத்து ஆட்டம் போடுவோர் வீட்டுக்குத்தான் போவார்கள் - என்றார்.

# ரணில், சஜித் போன்ற சில்லறைகளினால் ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்க முடியாது

## கூறுகின்றார் அதாவுல்லா



கொழும்பு, ஜூன் 21

"தென்னிலங்கையில் ஆழமா கக் காலூன்றி வரும் சிங்களத் தலைமைக்கு நிகராக இன்னு மொரு தலைமை உருவாகும் வரை ரணில், சஜித் போன்ற சில்லறை அணிகளினால் ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்க முடியாது."

- இவ்வாறு தேசிய காங்கி ரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

"நல்லாட்சி அரசில் ஆறடி நிலத்தில் கூட அபிவிருத்தி செய்யாத முஸ்லிம் தலைமை கள் இன்று ஆகாயத்தில் கோட்டை கட்டப் போவதாக, உரிமை அரசியல் பேசுவது இந்த ஆண்டின் அதிசிறந்த நகைச்சுவையாகப் பதியப் படும்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் குறித்து கொழும்பில் ஊடகவியலாளர் களுக்கு விளக்கமளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருந்தலைவர் அஷ்ரஃபின் அரசியல் வழிகாட்டல்களைப் புறந்தள்ளி அரசியல் செய்த சில தலைமைகள் இன்று இரண்டுங்கெட்டான் நிலைக்குள் மாட்டியுள்ளன.

சமூகத்தின் உண்மையான எதிர்பார்ப்புக்களை உணர்ச்சி வசப்படுத்தி மழுங்கடித்த இத்தலைமைகள், கடந்த நல்லாட்சி அரசில் எதையும் செய்யவில்லை. ஆட்சியின் பங்கு தாரர்களென மார்பு தட்டித்திரிந்த சிலரால் முஸ்லிம் பிரதேசங்களில் ஆறடி நிலத்தைக் கூட அபிவிருத்தி செய்ய முடியாமல்போனது. திறைசேரிக் கொள்ளையர்களைக் காப்பாற்றி எமது நாட்டின் சொத்துக்களைச் சூறையாடுவதற்கே இவர்கள் துணைபோயுள்ளனர்.

அடிப்படைவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதங்களுக்கு எதிராகச் செயற்பட்டு தேசப்பற்றை வெளிப்படுத்தி வந்த முஸ்லிம்களை, சகோதர சமூகங்கள் சந்தேகக் கண்ணுடன் நோக்கும் நிலைமையை கடந்த நல்லாட்சி அரசே ஏற்படுத்தியது. எம்மக்களுக்கு இன்று தேவைப்படுவது உணர்ச்சி வசப்படுத்தும் வாக்குறுதிகளல்ல.

மக்களை நிம்மதியாக வாழவைக்கும் தேவைகளே எமது தலைகளில் சுமத்தப்பட்டுள்ளது. இந்தத் தேவைகள், உரிமைகளை வென்றெடுப்பதற்கு பலமான அரசு அவசியம்.

ரணில், சஜித் என இன்று ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டுள்ள இலட்சணத்தில், இவர்களால் பலமான அரசல்ல, பலமான எதிர்க்கட்சியாகவும் வர முடியாது. எனவே, முஸ்லிம் சமூகம் உணர்ச்சி அரசியலிலிருந்து அவசரமாக விடுபட வேண்டும். உணர்ச்சி வசப்பட்டதால் சிறுபான்மைச் சமூகங்கள் அபிவிருத்தி உள்ளிட்ட உரிமைகளை வெல்வதிலிருந்து தூரமாக்கப்பட்ட வரலாறுகளே அதிகம்.

தென்னிலங்கையில் ஆழமாகக் காலூன்றி வரும் சிங்களத் தலைமைக்கு நிகராக இன்னுமொரு தலைமை உருவாகும் வரை ரணில், சஜித் போன்ற சில்லறை அணிகளினால் ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்க முடியாது. எனவே, தென்னிலங்கைச் சமூகங்களுடன் இயைந்து செல்லும் அரசியல் தலைமை பற்றியே முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும். இதைவிடுத்து தொடர்ந்தும் பெரும்பான்மை சமூகங்களின் சந்தேகங்களுக்குள்ளாகும் அரசியல் சூழலை ஏற்படுத்துவது ஆபத்தாகவே அமையும்- என்றார்.

# இரட்டை முகத்துடன் தமிழ்க் கூட்டமைப்பு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 21

அரசியலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரட்டை முகத்துடன், செயற்படுவதாக தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்து நெத்தி குற்றம் சுமத்தியுள் ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினை களுக்கு தீர்வு வழங்குவதாக இருந்தால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து பணியாற்ற தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு தயாராக இருப்பதாகக் கூட்டமைப் பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சுனில் ஹந்துநெத்தி இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், "ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசின் போது தமிழ் தேசியக் கூட்ட மைப்பு எப்போதும், அவர் களுடன் இணைந்து செயற் பட்டிருந்ததுடன், வரவு செலவு திட்டங்களுக்கும் ஆதரவு வழங்கியிருந்தனர்.

எனினும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் சமூகத்திற்கு ஒரு சதத்தினை கூட செலவிட முடியாமல்போனது.

தற்போது ராஜபக்ச தரப்பினரை நோக்கி நகர்கின்றனர். இது அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை முகத்தை காட்டுகிறது -என்றார்.

# பிரதமர் மஹிந்தவுடன் இந்திய தூதுவர் பேச்சு



கொழும்பு, ஜூன் 21

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே நேற்று முன் தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்வைச் சந்தித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பாக உரையாடப்பட்டுள்ளது.

# அவசியமின்றி வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த்துகொள்ளுங்கள்

## வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரிக்கை

வவுனியா, ஜூன் 21

தற்போதைய சூழலில் பொதுமக்கள் அவசியம் இல்லாமல் வவுனியா வைத்தியசாலைக்கு வருவதை தவிர்துகொள்ளுமாறு வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.நந்தகுமார்தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுமக்கள் அவசிய தேவையில்லாமல் வைத்தியசாலைக்கு வருவதை தவிர்துக்கொள்ளுங்கள். ஊரடங்கு முறைமை தளர்த்தப்பட்டி ருந்தாலும், கொரோனோ வைரஸ் தாக்கம் முற்றாக அகலவில்லை.

இந்நிலையில் வைத்தியசாலை விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறும் நோயாளர்களை பார்வையிடுவதற்காக அவர்களது உறவினர்கள் அதிகமான அளவில் வருகைதருகின்றனர்.

இதனால் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால் அது அனைவருக்கும் விரைவாக பரவும் சூழல் ஏற்படும்.

அத்துடன் அதிகளவான பார்வையாளர்கள் வருகைதரும் போது, வைத்தியசாலையின் காவலாளிகளிற்கும் அவர்களுக்கும் இடையில் முரன்பாடுகள் ஏற்படும் சம்பவங்களும் உருவாகின்றது.

எனவே நிலைமையை கருத்தில் கொண்டு அவசியத்தேவையை தவிர ஏனையோர் வைத்தியசாலைக்கு வருவதை முற்றாக தவிர்த்துக்கொள்வதுடன், வருகைதருவோர் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பேணவேண்டும்-என்றார்.

பாகம் – 22

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?

இதில் பரமதேவாவுக்குப் பிரச்சினை இல்லை. ஏனெனில் அவரது தண்டனைக் காலம் இன்னமும் சில நாட்களில் முடிவடைய இருந்தது. ஆனால் ஏனையவர்களின் நிலைதான் அவருக்குக் கவலையாக இருந்தது.

சித்தா ஈழ மாணவர் பொதுமன்றத் துடன் (Guss ) தொடர்புபட்டிருந்தார். தொடர்ந்து அவர்களின் சித்தாந்தங் களால் கடுப்பேறி ஒதுங்கியிருந்தார். இவரைப்போலவே வந்தாறுமூலையைச் சேர்ந்த பாலா என்றழைக்கப்படும் பாலசந்திரனும் “கோழைத்தனங்களைச் சித்தாந்தப் போர்வை கொண்டு மறைக்கின்றனர்” என்று கூறிச் சில காலம் ஈ.பி. ஆர்.எல்.எவ் விலிருந்து விலகியிருந்தார்.

பரமதேவாவின் வேண்டுகோளை ஏற்றுச் சித்தாந்தங்களைத் தூக்கி யெறிந்து விட்டு செயலில் இறங்குவது சித்தாவுக்குப் பிடித்திருந்தது. சித் தாவை அவரது வீட்டில் வந்து சந்தித்தார் வரதன். பனாகொடையைச் சிறையிலிருந்து விடுவிப்பது எப்படிச் சாத்தியமாகலாம் என இருவரும் கலந்தாலோசித்தனர். அடுத்த சந்திப்பு இன்னொரு வீட்டில் இடம்பெற்றது. புல்மோட்டையில் பனாகொடை கைதாகும் போது தப்பிச் சென்ற பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெயா, மற்றும் மனோ, சிங்கன், வரதன் ஆகியோருடன் இச்சந்திப்பு நடந்தது. “சிறையிலிருந்து வெளியே வந்தால் நாங்கள் பத்திரமாகக் கூட்டிச்செல்வோம். அதற்குரிய ஏற்பாடுகளை பனா கொடையையே செய்யச் சொல்லுங்கள். வெளியிலிருந்து உள்ளே சென்று இவரை அழைத்து வருவது சாத்தியமில்லை” என அவர்கள் சித்தாவிடம் தெரிவித்தனர். அவர் அதைப் பரமதேவாவிடம் போய்ச் சொன்னார்.

**விடுதலைக்கு உதவிய சிறைக்காவலர் கிருஷ்ணமூர்த்தி!**

பரமதேவாவும் பனாகொடையும் சிறைக்காவலர் கிருஷ்ணமூர்த்தியுடன் தொடர்புகொண்டனர். அவர் சிறையின் வெளிக்கதவின் திறப்பை எடுத்து சவர்க்காரத்தில் அழுத்தி அதைச் சித்தாவிடம் கொண்டுவந்து கொடுத்தார். சித்தா அதனைக் கொண்டு போய்த் திறப்புச் செய்பவரிடம் கொடுத்து நகல் ஒன்றைச் செய்து கொண்டு வந்தார். அது கனகச்சிதமாக பொருந்தியது என்பதை கிருஷ்ணமூர்த்தி உறுதிப்படுத்தினார். அதை பரமதேவா பனாகொடையிடம் கொடுத்தார் .

இவர்கள் ஏதோ திட்டம் போடுகிறார்கள் என்பதை ஊகித்த சக கைதிகள் அதை உணர்ந்து விட்டனர். பனா கொடையுடன் முரண்பட்டனர். இரவும் பகலும் முறை மாற்றி ( ரேர்ன் போட்டு ) அவரின் நடவடிக்கைகளைக் கண்காணித்தனர். நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த பரமதேவா ஒவ்வொரு இயக்கத்தின் முக்கியஸ்தர்களைகளையும் கண்டு ஒரேயடியாக எல்லோரும் தப்பிப் போக ஏற்பாடு செய்வோம் என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரச்சினை இல்லை. டக்ளஸ் சொன்னால் அனை வரும் கேட்பர். புளொட்டைக் கையாளு வது சற்றுச் சிரமம். ஒரே உறையில் இரு வாள்கள் பரந்தன் ராஜனும் , மாணிக்கம்தாசனும். இதற்கு ஒரே வழி பரமதேவாவின் புகழால் தன் னைப் பிரபல்யப்படுத்திக்கொண்ட வாசுதேவாவிடம் சொல்லி வெளியே வருவோரைச் கூட்டிச்செல்ல ஏற்பாடுகளைச் செய்யச் சொல்வதுதான். பரமதேவாவின் அண்ணன்தான் வாசுதேவா. இவர் ரிவோல்வரைச் சுற்றிக்காட்டி விலாசமடித்துத் திரிந்தாலும் ஒரு வாகனத்தை ஒழுங்கு பண்ணித் தருவதாக வாக்களித்தார். ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் இவர்களுடன் செல்வதாக ஏற்பாடு இருந்தது. ரெலோவினர் மட்டக்களப்பில் தமக்கு எவருமே இல்லை என்று சொன்னபடியால் புளொட் . ஈ.பி.ஆர். எல். எவ் வுடன் போகச் சொன்னார் பரமதேவா.


**புலிகளிடம் ஆயுதம் கோரிய கொமாண்டர் குன்சி**

வெளியே செல்பவர்களுக்குப் பாதுகாப்பின் நிமித்தம் ஆயுதங் கள் தேவை. புலிகளின் பிரதிநிதி ராமு விடம் ஆயுதங்கள் கோரப்பட்டன. பொதுவாகவே புலிகள் ஆயுதவிடயத் தில் மிகக் கண்டிப்பானவர்கள். அவர்களிடம் பலஸ்தீனப் பயிற்சி பெற்ற ஈ.பி. ஆர்.எல்.எவ் வின் கொமாண்டரான குன்சி ஆறு எஸ். எல்,ஆர் ..... என்றொரு ஆயுதங்களின் பட்டியலைக் கொடுத்தார். திருநெல்வேலிச் சமரில் எடுத்ததே ஆறு எஸ்.எல்.ஆர் தான். நிப்பிட்டர்,எஸ்.எம் .ஜி (உப இயந்திரத் துப்பாக்கி) குண்டுகள் என மேலும் சில கைப்பற்றப்பட்டு இருந்தாலும் இவர்களை நம்பி எப்படி ஆயுதங்களைக் கொடுப்பது ? இரகசியத் தன்மையோ அக்கறையோ இல்லாதவர்கள் இவர்கள்.

குறிகாட்டுவானில் சக வீரர்களைப் படகில் ஏற்றுவதற்காக வந்த கடற்படைச் சாரதி ஸ்ரேறிங்கில் தலை வைத்துப் படுத்திருக்கும் போது அவரது தலையில் சுட்டு விட்டு சுரிகுழல் துப்பாக்கியைக் கைப்பற்றியிருந்தது புளொட். அதனைக் களவு சம்பந்தமான விசாரணைக்காக வந்த பொலிசாரிடம் பறிகொடுத்தது. ஒரு சமரிலோ, முற்றுகையிலோ ஆயுதங்களைப் பறிகொடுப்பதென்பது வேறு விடயம். எனவே இந்த விடயம் பரிசீலனைக்குரியதல்ல என்று பதிலளிக்கப்பட்டது.

**வெளியேற மறுத்த வண பிதா சிங்கராயர்**

அடுத்தது புலிகள் இயக்க உறுப்பி னர்கள் எவரும் சிறையில் இல்லாவிடி னும் நித்தியானந்தன் ( பல்கலைக்கழக விரிவுரையாளர்) நிர்மலா நித்தியானந் தன்(ஆசிரியை), அருட் தந்தையர்கள்


டேவிட் ஐயா

சிங்கராஜா, சின்னராஜா, போதகர் ஜெய திலக ராஜா , அவரது அண்ணன் டாக்டர் ஜெயகுலராஜா, ஆகிய புலிகளின் ஆதரவாளர்கள் இருந்தனர். இவர் களில் வண. பிதா சிங்கராஜா தான் கத்தோலிக்கத் திருச்சபைக்குக் கட்டுப் பட்டவர் என்றும் சட்டப்படிதான் நிரபராதி என நிரூபித்தே வெளியில் வரப்போவதாகவும் தெரிவித்து விட்டார். ஏனையோர் தப்பிச் செல்லச் சம்மதம் தெரிவித்தனர்.

இவர்களில் நிர்மலா எப்போது சுதந்திரப் பறவையாவேன் - பூவரச மரங்களை, இலைகளை எப்போது காண்பேன் எனத் துடித்துக்கொண்டிருந் தார்.

புலிகளைச் சார்ந்தோரைக் கொண்டுசெல்லும் பொறுப்பைப் பரமதேவா ஏற்றுக்கொண்டார். இதில் பிரபாகரனுக்குத் திருப்தி. பரமதேவாவும் பிரபாகரனும் சந்தித்திருக்கா விட்டா லும் அவரது துணிச்சல், நேர்மை முத லான விடயங்களை ஏற்கெனவே அறிந்திருந்தவர் என்ற வகையில் பரமதேவா மீது பெருமதிப்புப் கொண்டிருந்தார்.

**நிர்மலாவை தோளிலேனும் தூக்கி வருவேன் என்ற மாணிக்கம் தாசன்!**

அடுத்து தப்பும் திட்டம் - மடக் கப்படும் சிறைக் காவலர்களைக் கட்டி வாயில் பிளாஸ்டர் போடும் வேலை புலிகளைச் சார்ந்தோருக்கு வழங்கப் பட்டது. நிர்மலாவை மீட்கும் பொறுப்பு புளொட்டைச் சேர்ந்த மாணிக்கம் தாசனிடம் கொடுக்கப்பட்டது. இப் பொறுப்பைக் கையளிக்குமுன்னர் இதில் ஏதும் நடைமுறைச் சிக்கல் இருக்கிறதா என அவரிடம் வினவப்பட்டது .



அதற்கு அவர் “நான் நிர்மலா அக்காவை தோளிலேனும் தூக்கிக்கொண்டு வருவேன்” என உறுதியளித்தார்.

இவ்வாறாக ஒவ்வொரு பகுதியின ருக்கும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. புலிகள் சார்பானோரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் வினரும் தமது கடமையைச் சரியாகச் செய்தனர். நிர்மலாவை மீட்கும் பொறுப்பை ஏற்ற மாணிக்கம் தாசன் தான் வெளியில் போனால் போதும் என்று ஓடிவிட்டார் . நிர்மலாவை நினைக்கவே இல்லை. அந்த முயற்சியில் இறங்கிப் பயனளிக்க வில்லை என்றால் மற்றவர்கள் உதவிக்கு வந்திருப்பர். ஏற்பாட்டின்படி புளொட், ஈ.பி. ஆர்.எல்.எப், டெலோ வாகனத்தில் சென்றுவிட்டனர்.

வாகனத்தில் செல்வோரைப் படகு மூலம் கொண்டு செல்வதற்குரிய ஏற்பாடு களைப் பரமதேவா ஏற்கெனவே செய்திருந்தார். கல்லடி வாசிகளான சாந்தி , தூசைப்பிள்ளை, நாவலடியைச் சேர்ந்த யோகன் , சின்னவன் ஆகியோர் படகுகளுடன் தயாராக இருந்தனர்.

கல்லடிச் சாந்தி மட்டக்களப்பில் ஆரம்ப காலத்தில் நடைபெற்ற பஸ் எரிப்புப் போன்ற அரச எதிர்ப்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டவர். இவ்வாறான குற்றச்சாட்டில் பின்னாளில் பிரபல எழுத்தாளர் எஸ்.பொவின் மகன் நுசு.அனுராவும் கைதாகி இருந்தார். அந்த வகையில் இவர்கள் எல்லோருமே பரமதேவாவுக்கு அறிமுகமானவர்கள். படகு தேவையென்ற பரமதேவாவின் கோரிக்கையைக் கல்லடிச் சாந்தியிடம் தெரிவித்தவர் சித்தா.

எனினும் புளொட்டைச் சார்ந்த காந்தியம் டேவிட் ஐயாவைக் கொண்டுசெல்லத் தவறிவிட்டனர். சிறைக்கு உள்ளே மட்டுமல்ல வெளியி லும் சொதப்பி விட்டனர் புளொட்டினர். சிறையிலிருந்து தப்பிய இயக்கம் சாரா தோர், மீன் பிடிப்போர், கிறிஸ்தவ மத குருமார், இந்தியாவுக்குப் படகு ஓட்டுவோர். முதலானோர் எனத் தொடர்ச்சியாகப் பலர் உதவியதால் டேவிட் ஐயா இந்தியா போக முடிந்தது. அண்மையில் இவர் கிளிநொச்சியில் காலமானார். ஆனந்தபுரத்தில் உள்ள பொது நிறுவனமொன்று இறுதி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. கே.பி. மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரன், சித்தார்த்தன், முதலானோர் இதில் கலந்து கொண்டனர் . காந்தியம் மூலம் இவர் ஆற்றிய பணிகளைக் கௌரவிக்கு முகமாக முன்னாள் போராளிகள் பலரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

**படுவான்கரைக்குச் சென்றோரைப் பொறுப்பெடுத்த தம்பிராஜா!**

ஈ.பி.ஆர்.எல். எவ்ச் சேர்ந்த வரதராஜ ப்பெருமாள், சின்னவன், மற்றும் பனா கொடை,சுப்பிரமணியம்,காளி,வர தன்,ஜெயா,மனோ, சிங்கன் சித்தா, பரமதேவா,புலிகளின் ஆதரவாளர்கள் ஆகியோர் முன்னர் தாங்கள் செய்த ஏற்பாட்டின்படி தோணியில் பெரிய களத்துக்குச் சென்று அங்கிருந்து படுவான்கரைக்குப் போய் விட்டனர். அங்கு அவர்களுக்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் தம்பிராஜா, மற்றும் தவம் (நசார்) பாலிப்போடி செல்வநாயகம் (செல்வம் - யதுகுலன்) ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

மணல்பிட்டியில் மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை அவர்களுக்குச் சொந்தமான கடை ஒன்று இருந்தது. அங்கே புலிகளின் ஆதரவாளர்கள் தங்கவைக்கப்பட்டனர்.பின்னர் தம்பிராஜா இவர்களைப் படகு மூலம் திருக்கோவிலில் கொண்டு சேர்த்தார். அங்கு கவீந்திரனும் பிரபலமான வணிகர் ஒருவரும் இவர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தனர்

சகோதரரான இருவரும் ஒரே இடத்தில் நிற்கக்கூடாது. ஒன்றாகப் பயணம் செய்யக்கூடாது. எதாவது நடந்தால் இருவருக்கும் ஆபத்து எனக் கருதி டாக்டர். ஜெயகுலராஜா திருக்கோயில் பகுதிக்கு அப்பால் சென்று விட்டார்.

(நாளையும் வரும்)

உலகச் செய்திகள்

# தமிழர்களை கொன்று குவித்த உங்களுக்குப் பால் கிடையாது!

## இலங்கை ராணுவத்தின் கோரிக்கையை உடனேயே நிராகரித்தது தமிழக அரசு

சென்னை, ஜூன் 21

தமிழக அரசு நடைமுறைப் படுத்தும் ஆவின் பால் திட்டத் தின் மூலம், இலங்கை இராணு வத்துக்கு நாளாந்தம் பால் வழங்கும் கோரிக்கையை தமிழக அரசு நிராகரித்துள்ளது.

தமிழக பால்வளத்துறை அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி இதனை தெரிவித் துள்ளார்.

ஆவின் பால் திட்டத்தின் மூலம் இலங்கை இராணுவம் நாளாந்தம் ஆயிரம் லீற்றர் பால் வழங்கும் திட்ட முன்மொழிவை தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் எமக்கு அனுப்பியது. ஆனால், தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை இராணுவத்துக்குப் பால் வழங்கமாட்டோம் என முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அந்தத் திட்டத்தை நிராகரித்து விட்டார் என அவர் தெரிவித்துள்ளார்.

“இலங்கை அரசு, தமிழக முதல்வரைத் தொடர்பு கொண்டு ராணுவத்திற்கு ஒரு லட்சம் லிட்டர் பால் கேட்டது. ராணுவத்திற்குப் பால் தர மறுத்து அங்குள்ள மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஆவின் பால் தர சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது” என்று அமைச்சர் தெரிவித்தார்.



## அமெரிக்க தேர்தலில் யாருக்கு வெற்றி?

வாஷிங்டன், ஜூன் 21

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்கு ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடன் அதிக வாய்ப்பு இருப்பதாக தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடன் களமிறங்கியிருக்கிறார்.

இந்தநிலையில், அமெரிக்காவின் கின்னிபியாக் பல்கலைக்கழகம் கடந்த 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை தேசிய அளவில் நடத்திய கருத்து கணிப்பொன்றை நடத்தியது. இதன் முடிவுகள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டன.

இதில், தற்போது தேர்தல் நடைபெற்றால் யாருக்கு வாக்களிப்பீர்கள் என்று மக்களிடம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதற்கு, ட்ரம்புக்கு ஆதரவாக 41 சதவீதம் பேரும் அவரை எதிர்த்து போட்டியிடும் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பிடனுக்கு ஆதரவாக 49 சதவீதம் பேரும் வாக்களித்தனர்.

இதேவேளை, வேலை இழப்பு பொருளாதார சரிவு உள்ளிட்ட விவகாரங்களில் ட்ரம்பின் தலைமைக்கு எதிராக 55 சதவீதம் பேர் வாக்களித்தனர்.

## ஒரே நாளில் 181,000 பேருக்கு தொற்று உலகம் மிகவும் ஆபத்தான கட்டத்தில்!

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கடந்த வியாழக்கிழமை உலகளவில் 150,000 பேர் கொரோனா தொற்றிற்கு உள்ளாகியுள்ளனர். ஒரேநாளில் இந்தளவு அதிகமானவர்கள் தொற்றிற்குள்ளான முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கொரோனா பரவலில் புதிய அபாயகரமான கட்டத்தில் இருக்கிறோம் என உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, தெற்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில்தான் அதிக பாதிப்பு இருந்து வருகிறது. நாம் தற்போது புதியதும் அபாயகரமானதுமான கட்டத்தில் இருக்கிறோம். கொரோனா இப்போதும் அதிவேகமாகவே பரவிக் கொண்டிருக்கிறது. ஆகையால் முக கவசம் அணிவது, சமூக விலகலைக் கடைபிடிப்பது, கை கழுவுதல் ஆகியவை தற்போதும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

கொரோனா வைரஸ் தாக்குதல் தொடர்பாக உலக நாடுகள் அனைத்தும் மிக மிக கவனமானவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிப்பது என்பது கடினமான பயணமாக இருக்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் மாத்திரம் 181,005 பேர் கொரோனா தொற்றிற்கு இலக்காகியுள்ளனர். இது கொரோனா தொற்றின் புதிய உச்சமாகும். நேற்று முன் தினம் 5,066 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்தனர். மொத்த உயிரிழப்பு 461,820 ஆக உயர்ந்துள்ளது.

181,005 பேர் நேற்று முன் தினம் தொற்றிற்குள்ளாகினர். பாதிக்கப்பட்டவர்கள் மொத்த எண்ணிக்க 8,750,990 ஆக உயர்ந்துள்ளது.

**பிரேஸில்**

நேற்று முன் தினம் 1,221 பேர் உயிரிழந்தனர். மொத்த உயிரிழப்பு 49,090 ஆக உயர்ந்துள்ளது. 55,209 பேர் புதிதாக தொற்றிற்குள்ளாகினர். 1,038,568 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

**அமெரிக்கா**

நேற்று முன்தினம் 719 பேர் உயிரிழந்தனர். மொத்த உயிரிழப்பு 121,407 ஆக உயர்ந்துள்ளது. 33,539 பேர் புதிதாக தொற்றிற்குள்ளாகினர். 2,297,190 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

**மெக்ஸிக்கோ**

நேற்று முன் தினம் 667 பேர் உயிரிழந்தனர். மொத்த உயிரிழப்பு 19,747 ஆக உயர்ந்துள்ளது. 5,662 பேர் புதிதாக தொற்றிற் குள்ளாகினர். 165,455 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

**இந்தியா**

366 பேர் நேற்று முன் தினம் உயிரிழந்தனர். இதுவரை 12,970 பேர் உயிரிழந்துள்ளனர். புதிதாக 14,721 பேர் தொற்றிற்குள்ளாகினர். இதுவரை 395,812 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர சிலி 252, பெரு 199, ரஸ்யா 181, பிரிட்டன் 173 ஆகிய நாடுகளில் உயரிழப்புக்கள் பதிவாகின.





## மாலியில் அரசியல் குழப்பம்!

### ஜனாதிபதிக்கு எதிராக திரண்டனர் மக்கள்

பமாகோ, ஜூன் 21

மாலி ஜனாதி பதியை பதவிவிலக வலியுறுத்தி நேற்று முன்தினம் தலைநகரில் பிரமாண்ட போராட்டம் இடம்பெற்றது.

75 வயதான ஜனாதிபதி இப்ராஹிம் பௌபக்கர் கீற்றாவை பதவி விலக வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலிறுத்தி வருகின்றன. எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய “ஜூன் 5 இயக்கம்” இந்த போராட்டங்களை ஒழுங்கமைத்து வருகிறது.

நேற்று முன் தினமும் தலைகர் பமாகோவில் பெருமளவான மக்கள் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டின் வடக்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் அதிகரித்து வரும் அமைதியின்மை, பொருளாதா விவகாரங்களால் ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்தி அதிகரித்துள்ளது.

அங்கு முக்கிய அரசியல் நட்சத்திரமான வளர்ந்து வரும் மதத்தலைவர் மஹ்மூத் டிக்கோ இந்தப் போராட்டங்களை வழிநடத்துகிறார்.

அல்-கொய்தா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் இணைந்த குழுக்கள், இனப் போராளிகள் மற்றும் மாநில, பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகள் தெற்கில் துவாரெக் பிரிவினைவாதிகள் என மாலி குழப்பங்களின் கூடாரமாகியுள்ளது.

2012 இல் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவான கீற்றா, 2018 இல் மீண்டும் அடுத்த 5 ஆண்டுக்கு ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.

நேற்று முன் தினம் நகர மத்திய சதுக்கத்தில் ஒன்றுகூடிய மக்கள் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் எதிரான கோசங்களை எழுப்பினர்.

போராட்டக் காரர்களைச் சமரசப்படுத்த ஆசிரியர்களின் நீண்டகால ஊதிய சர்ச்சையை தீர்த்தமை உள்ளிட்ட சில நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்ததுடன், முழுமையான சீர்திருத்தத்தை நாட்டில் ஏற்படுத்துவதாக உறுதியளித்தபோதும், போராட்டங்கள் கட்டுப்பாட்டில் வரவில்லை.

மாலியில் கூர்மையான அரசியல் பிளவு அண்டை நாடுகளையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. மேற்கு ஆபிரிக்க நாடுகளான புர்கினோ பாசோ, நைஜரில் ஏற்கனவே கொந்தளிப்பான நிலைமையுள்ள சமயத்தில், மாலியின் போராட்டங்களை முன்னுதாரணமாக கொண்டு, அங்கும் குழப்பங்கள் ஏற்படலாமென்ற அச்சம் எழுந்துள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.06.2020 அன்று வெளியிடப்பட்டது.